**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC** 142/2017 |
| Prosecution Witness | : | அ.சா.20 |
| Name | : | சதிஷ்குமார் |
| Father's/Husband Name: | : | கந்தசாமி |
| Address : | : | 5/445, டி.கே.எஸ் ரோடு, பூஞ்சோலை, தொண்டமாந்துறை அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா பெரம்பலூர் |
| Age | : | 55/2023 |

தேதி: 23/11/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது

( 1 **முதல்** 4 **எதிரிகள் ஆஜர்**)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் தொண்டமாந்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்தேன். எனது உறுப்பினர் எண்.2718 மேலும், எனக்கு இவ்வங்கியில் சேமிப்பு கணக்கு இருந்தது. அதன் கணக்கு எண்.779. 1994 லிருந்து நான் இந்த சேமிப்பு கணக்கில் பணப்பரிவர்த்தனை செய்து வந்தேன். 31/10/1999 அன்று இந்த சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் என்னை விசாரித்தார். 1996 ம் ஆண்டு நான் ரூ.25 ஆயிரம் எனது வங்கி கணக்கில் எடுத்தேனா என விசாரித்தனர்.

நான் எடுக்கவில்லை எனவும், எனது வங்கி கணக்கில் கிட்டத்தட்ட ரூ.21 ஆயிரம் மதிப்பில்தான் பணம் இருந்தது எனவும், அப்போது கூறினேன். ரூ.25 ஆயிரத்திற்கான செலானில் எனது கையொப்பம் உள்ளதாக கூறினார்கள். ஆனால் நான் அது என்னுடையது அல்ல என கூறினேன். மேலும், எனது பாஸ் புத்தகத்திலும், அதற்கான பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 1996 ம் ஆண்டு செயலாளராக செல்லப்பிள்ளையும், காசாளாராக கணபதியும் அந்த சங்கத்தில் பணியாற்றினார்கள். நான் பணம் எடுக்கும்போதும், பணம் வங்கியில் டெப்பசிட் செய்யும்போதும், மேற்கண்ட இரண்டு நபர்கள்தான் வங்கியில் இருப்பார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த பாஸ் புத்தகம் என்னுடையதுதான். அந்த பாஸ் புத்தகம் **அ.சா.ஆ.**27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் சங்க அதிகாரி என்னை விசாரித்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.**28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**முதலாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தொண்டமாந்துறை சங்கத்தில் என்னைத்தவிர வேறு யாருடைய பெயரிலும் வங்கி கணக்கில் இல்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் எனது அம்மா மற்றும் அப்பா பெயரில் தனித்தனி கணக்கு உள்ளது. பொதுவாக வித்டிராவில் சிலிப் எழுதி கொடுத்து கையொப்பம் இட்டால்தான் பணம்

CVI

கொடுப்பார்கள் என்றால் சரிதான். காசாளர்தான் அந்த பணத்தை கொடுப்பார் என்றால் சரிதான். பொதுவாக நான் பாஸ் புத்தகத்தை எடுத்து சென்றுதான் வரவு செலவு செய்வேன் என்றால் சரிதான். நான் முறைப்படி கையொப்பமிட்டு எனது வங்கியிலிருந்து பணம் எடுத்துள்ளேன் என்றாலும், தற்போது, பணம் எடுக்கவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் நான் பணம் ஏதும் எடுக்கவில்லை என தனிப்பட்ட முறையில் புகார் ஏதும் கொடுக்கவில்லை. கூட்டுறவு சங்க அதிகாரிகள் 30/10/1999 ம் ஆண்டு என்னை விசாரணை செய்தனர். தனி அலுவலரிடம் நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் எழுதியதில் நான் சரிபார்த்து கையொப்பமிட்டேன். தனி அலுவலர் எதிரியை இந்த வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என கொடுக்கப்பட் புகாரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வங்கியில் வரவு செலவு செய்யும்போது, ஒவ்வொரு முறையும் பாஸ் புத்தகம் எடுத்து செல்வேனா என்றால் ஆமாம். அ.சா.ஆ.27 பாஸ் புத்தகத்தில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நபர்கள் தனித்தனியாக எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் பணம் எடுக்கும்போது, வித்டிராவல் சிலிப் கொடுப்பேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.28 வாக்குமூலத்தில் உள்ள

சங்கதிகளை நான் சொன்னதின் அடிப்படையில்தான் பதிவு செய்தார்களா என்றால் ஆமாம். நான் ஏவலர் சையத்அப்துல்சலிம என்பவரிடம் கொடுத்தேன் என வாக்குமூலத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். இரசீது செல்லப்பிள்ளையிடம் கேட்டேன். அவர் பின்னர் தருகிறேன் என கூறியிருந்தார் என நான் அ.சா.ஆ.28 ல் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கணபதியின் பெயரை வாக்குமூலத்தில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அப்துல்சலிம் இறந்துவிட்டதால் நான் அடையாளம் தெரியாமல் கணபதியை குறிப்பிடுகிறேன் என்றால சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

*sd/-*

Judicial Magistrate No.I,
Perambalur.